பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1481)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 3 வியாழக்கிழமை ( 15-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 58

★ இன யுத்தம் தமிழ் மக்களை பெரிதும் பாதித்துள்ளது
★ போரை முடிவுக்குக் கொண்டு வர புலிகளும் தயார்
★ வன்னிக்கான பொருளாதாரத் தடை நீங்கும்

# அரசு - புலிகள் நேரடியாக பேச்சை ஆரம்பிக்கும்நாள் தூரத்திலில்லை!

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டி

( நமது நிருபர் )

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இன்னமும் சில மாதங்களுக்குள் நேரடியான பேச்சுவார்த்தை இடம்பெறும்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் பூரண விருப்பத்துடன் இருப்பதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டிஒன்றில் தெரிவித்துள்ளார்,

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அனுசரணை ஏற்பாட்டாளராக இருந்து செயற்படுவதால் பூரணவெற்றியை இலங்கை அரசு கொண்டுள்ளது என்று, நேரடிப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை வெகு தூரத்தில் இல்லை என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

→8ஆம் பக்கம் பார்க்க

## அன்ரன் பாலசிங்கத்தின் வீடு தாக்கப்பட்டது சாதாரண சம்பவமே!

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் லண்டன் மாநகரிலுள்ள வீடு தாக்கப்பட்டமை அங்கு சாதரணமாக இடம்பெறுமொரு சிறியநாசவேலை இதனைச் செய்தி ஊடகங்களே பெரிதுபடுத்தியுள்ளனவென்று ''ஸ்கொட்லான்ட்ஜாட்'' அமைப்பு தெரிவித்துள்ளது.

லண்டனில் வீதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் கார்கள் உடைக்கப்படுவதும் வீடுகள் தாக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறுகின்ற சாதாரண சம்பவங்கள்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியை அவதூறுசெய்தபெண்ணின் வீடு தாக்கப்பட்டது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அவமரியாதை செய்யும் வகையில் செயற்பட்ட தமிழ்ப் பெண் ஒருவரின் வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது.

விலைவாசி உயர்வைக் கண்

→8ஆம் பக்கம் பார்க்க

## மனோராணி காலமானார்

(கொழும்பு)

கொழும்பு அன்னையர் முன்னணி தலைவியும், இனவிவகார அமைச்சின் ஆலோசகருமானடாக்டர் மனோராணி சரவணமுத்து நேற்று முன்தினம் காலமானார்.

மனோராணி சரவணமுத்து பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சட்.டி சொய்ஸாவின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

## செக். தூதுக் குழு கொழும்பு வருகை

இலங்கைக்கும் செக்கோசிலோவாக்கிய குடியரசுக்கும் இடையிலான இராஜீக உறவுகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக நேற்று செக்கோசிலோவாக்கிய குடியரசின் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான உயர் மட்டக் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர், படைத்தளபதிகள் மற்றும் செக்கோசிலோவாக்கிய தூதுவர் ஆகியோர் இக்குழுவில் அடங்குவர்.

ஜனாதிபதி. பாதுகாப்பு அமைச்சர், மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரை இக்

→8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளைத்தடைசெய்தால் சமாதானம் தடைப்படும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசாங்கம்தடை செய்யக்கூடாதெனமலையக தொழிலாளர் ஐக்கியமுன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரி.வி சென்னன் பிரித்தானியத் தூதுவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பிரித்தானிய அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யு மானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அது பெருமளவுக்குப் பாதிக்கும் என்றும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

## மிதிவெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

விடத்தற்பளை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் இராணுவத்தினர் நேற்று நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை மீட்டு அழித்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது (இ-4)

## அநாவசியமற்ற கைதினை தவிர்க்க உத்தரவு!

(கொழும்பு)

தேடுதல் நடவடிக்கைகளின் போது சட்ட விரோதமான முறையில் கைதுகளை மேற்கொளள வேண்டாம் என்று பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளதுடன் அதனை மீறி நடக்கும் பொலிசார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் எச்சரித்துள்ளார்:

இதுதொடர்பாக அமைச்சர் பட்டி வீரக்கோன் மேலும் தெரிவிக்கையில் தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவராகவும் நான் இருப்பதால் சட்ட விரோத கைதுகளை மேற்கொள்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (வ)

## கைது செய்யப்படுவோர் 7 நாள் தடுத்துவைப்பு?

(கொழும்பு)

அவசரகால விதியின் கீழ் கைது செய்யப்படுவோர் எதுவித விசாரணையுமின்றி 7 நாட்களுக்கு மட்டுமேதடுத்து வைக்கக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் எதுவிதவிசாரணையும் இன்றி 90 நாட்களுக்குதடுத்து வைத்திருக்கலாம் என்று தற்போ

→8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை தடைசெய்யும் பணியில் 18 தூதுவர்கள்

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய நாடுகளில் தடைசெய்யக் கோரும் பிரச்சாரத்தை விரைவுபடுத்துவதற்காக 18 இலங்கைத் தூதுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்கள் 18 பேரும் இது தொடர்பான விஷேட கூட்டம் ஒன்றிற்காக வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரால் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## புலிகளை பிரிட்டனில் தடைசெய்க அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்யவேண்டுமெனக்கோரி அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள பிரித்தானிய தூதரகத்துக்கு முன்னால் சுமார் நூறிற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தி கடந்த வெள்ளிக்கிழமை இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகள் மற்றும் பதாதைகளைத் தாங்கியவாறு சுமார் நான்கு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இ)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உயிர்காப்பு நிதி உவந்தளிக்க வாரீர்!

அன்புக்குரிய மக்களுக்கு,

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செபமாலை முத்து செலஸ்ரினம்மா ஆகிய நான் தங்களுக்கு தாழ்மையுடன் அறியத் தருவது யாதெனில் எனது கணவர் இறந்து 10 வருடங்கள் எனக்கு 4 பிள்ளைகள். 3பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் இருக்கிறார்கள். ஆண் மகனுக்கு வயது 12 எனவே உழைப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் இருக்கிறேன். 15வயதுடைய எனது மகளுக்கு இ தயத்தில் இருவால்வு சுருக்க நோயால் பாதிக்கப்பட்டு பெரிதும் கஷ்டப்படுகிறார். அவரை இந்தியா கொண்டு போய் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று டாக்டர்கள்கூறியுள்ளார்கள். ஆகவே அவருக்கு சத்திர சிகிச்சைசெய்வதற்கு 3 இலட்சம் ரூபா தேவை எனவும் டாக்டர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே மக்களாகிய நீங்கள் உங்களால் இயன்ற உதவியை செய்து எனதுமகளை காப்பாற்றி உதவுமாறு மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

ஊர்காவற்றுறை,
மக்கள் வங்கி.
க/கு இல 90507

இங்ஙனம்
செ. செலஸ்ரினம்மா


# வலி. வடக்கில் காணி சுவீகரிக்கப்பட்ட மக்களை வேறிடங்களில் குடியேற்றவும்

(கொழும்பு)

வலி. வடக்கில் படையினரால் சுவீகரிக்கப்பட்ட பகுதி மக்களை வேறிடங்களில் நிரந்தரமாக குடியேற்றுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது

வலிகாமம் வடக்குப் பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் படையினரால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் இனிமேல் மக்கள் மீளக் குடியேறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது

அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி மக்களின் காணிகளுக்குப் பதிலாக குடாநாட்டின் வேறு பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அரசு, யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளது.

குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் வடக்குப் பகுதிகளில் 65 ற்கும் மேற்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள சுமார் 70 ஆயிரம் குடும்பங்கள் கடந்த பத்து வருடங்களாக தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இவர்களில் ஆயிரக்கணக்கானோர் தற்போது பல்வேறு பகுதிகளிலும், அகதிமுகாம்களிலும் வசித்துவருகின்றனர்.

இதேசமயம்குடாநாட்டில், பொது மக்கள் விற்பனை செய்ய விரும்பும் காணிகள் பற்றிய விபரங்களை உடனடியாக சேகரித்து தனக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், பிரதேச செயலாளர்களுக்கு சுற்று நிருபங்களை அனுப்பி வைத்துள்ளார். (செ)

## வலய ரீதியில் பாடநூல் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டுப்பாடசாலைகளுக்கானஇலவசபாடநூல்கள் யாழ் மேலதிகமாகாண கல்விப் பணிமனையால் தரம்பிரிக்கப்பட்டு இன்று வலயங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கப்பல் மூலம் கடந்தவாரம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்ட பாட நூல்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

போதிய உத்தியோகத்தர்கள் இன்மையாலும், வாகன வசதிகள் இன்மையாலும்நூல்களை உடன் வலயங்களுக்கு வழங்குவதில் சில இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டதாக மேலதிக மாகாண பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-2,6,15)

## நோர்வேயின் உயர்மட்ட தூதுக்குழு இல. வருகை

(கொழும்பு)

நோர்வேயில் இருந்து உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று நேற்று இலங்கை வந்து சேர்ந்துள்ளது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புத் துணை அமைச்சர் தலைமையில் இலங்கை வந்திருக்கும் இக் குழுவினர் 10 நாட்கள் வரை இங்கு தங்கி இருப்பார்கள் என தெரியவருகிறது.

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருந்திக்காக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை இக்குழு மேற்கொள்ள விருப்பதுடன், இலங்கையின் அபிவிருத்தித் தேவைகளுக்காக சுமார் 1 கோடி 60 இலட்சம் நோர்வே பணத்தினை வழங்குவது சம்பந்தமானஒப்பந்த மூலம்இப் பேச்சுக்களில் கைச்சாத்திடப்படவுள்ளது

இதன் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-9)

## வீதி திருத்தம் இல்லை

[ஆவரங்கால்]

வல்வெட்டித்துறை கொம்மாந்துறை வீதி பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாது பள்ளமும் திட்டியுமாக காணப்படுகிறது. (உ-57)

## பிற்போடல்

(ஆவரங்கால்)

கொம்மாந்துறை சனசமூக நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலை விழா நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. (உ-57)

## நோர்வேயின் வருடாந்த கூட்டம்

(கொழும்பு)

நோர்வே ஒத்துழைப்புக் குறித்த வருடாந்த அரசியல் ஆலோசனைக் கூட்டங்கள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் பற்றியும், இலங்கையின் அரசியல் நிலமை, மனித உரிமைகள் கொள்கைப் பிரச்சினைகள் ஆகியன குறித்தும் பேசப்படவுள்ளது. (செ)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பி.ப.4 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் குருநகர் விளையாட்டுக்கழகமும் அதை எதிர்த்து கொழும்புத்துறை ஜெற்லைனஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (உ-15-6)

## கூட்டம்

(திருகோணமலை)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் இவ்வாண்டுக்கான பிரதிநிதிகள் சபைக் கூட்டம் மற்றும் பேரவை உறுப்பினர் கூட்டம் எதிர்வரும் மார்ச் 8,9 ஆம் திகதிகளில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெற இருக்கிறது. (உ-9)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அறக்கொடை நிதியில் இருந்து கூரைத்தகடுகள் மின் விசிறி என்பன அன்பளிப்பு செய்யப்பட்டன. (உ-6)

## கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

வல்லப்பிட்டிய சிறைச்சாலையிலிருந்த மூன்று கைதிகள் யன்னலை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக காலி சிறைச்சாலை அதிகாரி லக்ஷ்மன்சில்வா தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய இருவரும் தேடப்பட்டுவருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-5)

## சம்பள உயர்வுகோரி சோஷலிச தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசாங்க தனியார்துறை ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தைக் கூட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சோஷலிசத் தொழிலாளர் சங்கம் எதிர்வரும் 20 ம் திகதி முதல் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது.

ஜே. வி. பி. யின் ஆதரவிலேயே இச் சோஷலிச தொழி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மீனவரை விடுவிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு

வேறு நாடுகளில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளில் இலங்கைஅரசு ஈடுபட்டுவருவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற் பரப்பில்மீன் பிடித்துக் கொண்டிருந்த போது பிடிபட்ட மீனவர்களில் கடந்த மாதம் 72 பேர்விடுதலை செய்யப் பட்டபோதும் இன்னும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அத்துமீறிமீன் பிடித்ததாக கூறிக் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பலர் இந்தியா, மாலைதீவு, அந்தமான் தீவுகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-9)


கலாநிதி

**திருநாவுக்கரசு கமலநாதன்**

(பீடாதிபதி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி)

**வாழ்க!**

ஆயன் சகோதரி இராஜரா ஜேஸ்வரி
பாயருளாலே பவித்திரம் உற்றிடும்
நாயன்மார் கட்டின் நலந்திகழ் மைந்தர்
கமல நாதன் 'கலாநிதி' ஆனமை
நமக்கெலாம் மகிழ்ச்சியை நல்கிடும் அன்னவர்
கல்வி உலகின் கலங்கரை விளக்காய்
நல்லை முருகனின் நல்லருளாலே
வாழிய வாழிய வாழி பல்லாண்டே

நாயன்மார்கட்டு வாழ் மக்கள்

(கி/1489)



**YOGI HOME SCIENCE ACADEMY**

குறுகிய கால புதிய வகுப்புகள்

**19-02-2001 முதல்**

ஆரம்பமாக உள்ளது.

- ★ முக ஒப்பனை, நவீன தலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரங்கள்.
- ★ இந்தியன், கண்டியன், குஜராட்டி, மடிசார் போன்று வித்தியாசமாக சாறி அணியும் முறைகள்.
- ★ பூக்கள் தயாரித்தல், அலங்கரித்தல், செண்டுகள் செய்தல்.
- ★ துணியில் வர்ண அலங்கரிப்பு.

(Fabric Paintingand Saree Painting)

''மேலும் சகல ஒப்பனைப் பொருட்களும் கிறீம் வகைகளும் எம்மிடம் விற்பனைக்குண்டு''

ஏனைய மனையியல் வகுப்புகளும்

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 75 அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(2519) [வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக]



வலி கிழக்கு பிரதேசசபையினால் நடாத்தப்படும்

**கணனிப்பயிற்சி**

- ★ Ms Word
- ★ Ms Excel
- ★ Access

04 Months

- ★ மேற்படி பாடவிதானங்கள் எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ளது.
- ★ க. பொ. த(உ.த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ★ க. பொ. த(சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ★ பொதுஅறிவு, நுண்ணறிவுபரீட்சைமூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவத்தை வலி. கிழக்கு பிரதேச சபையின் உபஅலுவலகங்களான நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய், அச்சுவேலி, புத்தூர் ஆகிய அலுவலகங்களில் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து 'தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி- 28. 02. 2001

திரு. பூ. குணசிங்கம், ஜேபியுஎம்
வலி. கிழக்குபிரதேசசபை தவிசாளர்
தலைமை அலுவலகம், நீர்வேலி,
13.02.2001

(கி-1487)

# செய்தித் துளிகள்

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு ப 10.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் 'திருமந்திரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(செ)

## நிரந்தர நியமனம்

(சுண்டுக்குளி)

பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு ஆணைக்குழு கூட்டுறவு சங்கங்களில் நீண்டகாலமாக பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

அவ் சுற்றறிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களில் கல்வித்தகமை இன்றி தொடர்ந்து பணியாற்றி 5 வருட சேவையை பூர்த்தி செய்திருந்தால் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கைக்கு அமைய தற்பொழுது பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களில் கல்வித்தகமை இன்றி 5 வருட சேவையை பூர்த்தி செய்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்படுவதாக தெரியவருகிறது.

[உ-110]

## குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரான்லி வீதிப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் காயமடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில்லாலையைச் சேர்ந்த யோசப் அன்ரன் ஸ்ரனிஸ்லஸ் வயது53) என்பவரே விபத்தில் காயமடைந்தவராவார்.

(உ-12)

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்திஉத்யோகத்தர்களுக்கு சூழல்பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.

காரைநகர் சூழல் பாதுகாப்புக்கழகத்தின் தலைவரும் முன்னாள் விவசாயஉத்தியோகத்தருமானமு.சோமசுந்தரம் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளினை வழங்கினார்.

இக் கருத்தரங்கில் 33 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(உ-75)

## திருமலையில் மோதல்

(கொழும்பு)

திருகோணமலைப்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 3 விடுதலைப்புலிகளும் 2 படையினரும் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் இரண்டு படையினர் காயமடைந்துள்ளதாகவும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-9)

## உடற்பயிற்சி போட்டி

(சுண்டுக்குளி)

யாழ். கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல உடற்பயிற்சி போட்டிகள் கடந்த 12 ஆம் திகதி மு. ப 10 மணி தொடக்கம் வித்தியாலய மைதானத்தில் விளையாட்டுச் செயலாளர் திருமதி எஸ். தனேந்திரன் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக சென் சாள்ஸ் உடற்கல்வி ஆசிரியர் ஏ. கிறிஸ்ரோபர் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் சங்க மேலதிக தலைவர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகாசபை அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம் வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு தலைவர் இ. இலங்கைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ)

## இருவர் பலி

(கொழும்பு)

புசல்லாவை நகரிலிருந்து டேசன் தோட்டம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிற்றூர்தி ஒன்று தடம்புரண்டு 60 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த இருவர் ஸ்தலத்திலேயே பலியாகினர் 8 பேர் படுகாயமடைந்தார்கள்.

(உ-9)

## விளையாட்டு வீரர் சிரமம்

(சுண்டுக்குளி)

மூன்று மாதங்களுக்கு முன்பு வீசிய சுழற்காற்றின் போது யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கின் சேதமடைந்த கூரையோடுகளை திருத்துவதற்கு 55 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரையில் எந்தவித திருத்த வேலையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இவ்விளையாட்டு மைதானத்தை உபயோகிக்கும் விளையாட்டு வீரர்கள் மழையின்போதும் வெயிலினாலும் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதை அவதானிக்கக்கூடியதாய் உள்ளது.

(உ-110)

## மருத்துவ சேவை

[ஆனைக்கோட்டை]

வலி தென்மேற்கு பிரதேச சபையின்கீழ் இயங்கும்ஆனைக்கோட்டையில் உள்ள சித்த ஆயுர்வேத இலவச வைத்திய சாலையில் சகல விதமான நோய்களுக்கும் ஆயுர்வேத மருந்துகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாகதொய்வுசர்மரோகம் வாதநோய் சிறுவர் வைத்தியம் என்பன இங்கே சிறப்பாக இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் கர்ப்பிணித்தாய்மார் நீரிழிவு நோயாளி ஆகியோருக்கு ஆலோசனைகளும் இரத்த அழுத்தம் பரிசோதனைகளும்இடம்பெறுகின்றன.

(உ-125)

## கண்ணி வெடி மீட்பு

(வவுனியா)

அதிக மக்கள் நடமாட்டமுள்ள கிளிநொச்சி பிரதான வீதிப்பகுதியில் இருந்து 30 கிலோ எடையுள்ள கண்ணி வெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

(உ-5)

# தீர்வுப் பொதியின் அடிப்படையில் பேசினால் சமாதானம் குழம்பும்!

## புலிகளின் குரல் எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசு தனது தீர்வுப்பொதியின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சு நடத்தப்படவேண்டும் என்று இறுக்கமான நிபந்தனையை முன்வைத்துள்ளது.

இவ்வாறு புலிகளின் குரல் வானொலி குற்றம்சாட்டியுள்ளது

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நல்லெண்ண நோக்கில் விடுதலைப் புலிகள் ஒருமாத காலத்திற்கும் மேலாக கடைப்பிடித்து வரும் போர் நிறுத்தத்தைஅரசு நிராகரித்து விட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை முதலில் நடத்தப்படவேண்டும். அதன் வளர்ச்சியில்தான் போர்நிறுத்தம் பற்றிய முன்னேற்றம் காணப்படும் எனவும் அதுவரையில் தனது படை நடவடிக்கைகள் தொடரும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

சமாதான முயற்சியில் நேர்மையாக ஈடுபட்டு வருகின்ற போதும் அரசு தனது தீர்வுப் பொதியின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் நிபந்தனையை விதித்துள்ளது

இவ்வாறான அரசின் போக்குகள் சமாதானத்தை குழப்புவதாகவே அமைந்துள்ளது என புலிகளின் குரல் வானொலி மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது. (செ)

## மீன்பிடி குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச மீன்பிடிக் குழுக்கூட்டம் எதிர்வரும்19 ம் திகதி10 30மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள மீன் பிடிக்கும் அமைப்புகளினைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

(உ-75)

## இராசி பலன்

15-02-2001

(மாசி 03 வியாழன்)

அட்டமி பி.இ 2 54 வரை

விசாகம் பி.ப 3 39

இராகுகாலம் 2.03- 3.33

சுபநேரம் 8 03- 9.33

மரணயோகம்.

**மேடம்**
முயற்சி தடங்கல், எதிர்பாராதபிரச்சினை, பிரயாண பயம், வியாதி.

**இடபம்**
போசன சுகம், வாகன வசதி, தனவரவு, சுவாரஸ்யம்.

**மிதுனம்**
புதிய முயற்சி, பகைவர் விலகுவர், சந்தோசமான சம்பவம், வியாதி குணமடைதல்.

**கடகம்**
தாழ்வு நிலை கலகம், அமைதிக் குறைவு, காரிய தாமதம்.

**சிங்கம்**
உறவினர்வெறுப்பு, துணிவு ஏற்படாமை, முயற்சி தாமதம், தாய் வழி உறவு.

**கன்னி**
காரியம் கைகூடும், தன வரவு, குடும்ப சுகம், அன்னியர் சந்திப்பு.

**துலாம்**
வாக்குக் கலகம், வியாதி, காரிய தாமதம், பொருள் விரயம்.

**விருச்சிகம்**
கற்பனை மிகுதி, தடுமாற்றம், முயற்சி ஜெயம், உடல் நலக் குறைவு.

**தனுசு**
பிரயாணம், தனவிரயம், துயரம், திடீர்நன்மை.

**மகரம்**
காரியம் கைகூடும், கீர்த்தி, பொருள் வரவு, நண்பர்கள் உறவு.

**கும்பம்**
தொழில் மேன்மை, அதிகாரம், முயற்சி கைகூடும், தனவிரயம்.

**மீனம்**
வயிற்றுக் கோளாறு, கட்டுப்பாடு, பிரயாணம், மனச் சஞ்சலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தைமாத நிவாரணம் விநியோகிப்பது தாமதம் அரிசி தரமின்மை காரணம்

(ஆவரங்கால்)

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் தை மாதத்திற்கான நிவாரண விநியோகம் மிகவும் தாமதமான முறையில் இடம்பெற்று வருவதாய் தெரிய வந்துள்ளது.

யாழ். செயலகத்தில் இருந்து தரமான அரிசியைப் பெறுவதில் கூட்டுறவுச்சங்கங்கள் அனுபவித்து வரும் சிரமங்களே இத்தாமதத்திற்கு காரணம்என கூறப்படுகிறது.

மாசி மாத நடுப்பகுதிவரையான காலப்பகுதியில்50வீதமான பொதுமக்களுக்கே தை மாதத்திற்கான நிவாரணம் வழங்கப் பட்டிருக்கிறது

இதேவேளை, தரமான அரிசி எப்போது வருமென பொதுமக்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வாசல்களில் காத்திருக்கும் நிலை தொடர்வதாகவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, மாசி மாதத்திற்கான நிவாரண விநியோக பெயர்ப்பட்டியல்கள் தயாரிப்பு வேலை முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-57)

## பாடசாலைகள் மூடப்படும் விவகாரம் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிகிழக்கு கல்வி வலயத்தில் மூடப்பட உத்தேசிக்கப்பட்ட பதினொரு பாடசாலைகள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை வடமராட்சிக் கல்விவலயத்தில் நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் மேற்படி பிரதேசசபை தலைவர், வலய கல்விப்பணிப்பாளர், பிரதேச செயலர், பாடசாலைகளின் அதிபர்கள், இடம் பெயர்ந்தோர் நலன் புரிச்சங்கத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை. மேற்படி பாடசாலைகளை மூடும் முடிவினை மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சநா. தணிகாசலம்பிள்ளை கண்டித்துள்ளதுடன் இவ்விவகாரம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-2-6-15)

## காணாமற் போனோரின் உறவினர்களால் சத்தியக் கடதாசிகள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் சங்கத்தினரால் யாழ். அரச அதிபரிடம் ஒரு தொகுதி சத்தியக் கடதாசிவழங்கப்பட்டுள்ளது.

265 பேர் அங்கம் வகிக்கும் மேற்படி சங்கத்தினரால் 100 சத்தியக் கடதாசிகள் மாத்திரமே கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, காணமற் போனோர் தொடர்பாக உறவினர்களால் சமர்ப்பிக்கப்படும் இச் சத்தியக் கடதாசியை அவர்களை கண்டுபிடிப்பது தவிர வேறு எதற்கும் உபயோகிக்கக் கூடாது என்ற எழுத்து மூல நிபந்தனையுடனேயே இவை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாய் மேற்படி சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-12)

## சர்வோதய இயக்கம் யாழிற்கு பாதயாத்திரை

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் ஓய்ந்து சமாதானம் நிலைபெற வேண்டி சர்வோதய இயக்கம் யாழ்ப்பாணத்திற்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையில் யுத்தத்தின் முழக்கம் ஓய்ந்து சமாதானம் நிலைபெற வேண்டும் என்பதே இந்நாட்டுமக்கள் அனைவரினதும் வேண்டுகோளாகும்.

இந்த வேண்டுகோளை முன்வைத்தே இப்பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளதாக சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரட்ணா தெரிவித்துள்ளார்.

(செ)

# அரசசேவையாளர்களைபிழையான வழியில் நடத்த எதிர்க்கட்சி முயற்சி

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போது நாட்டில்நிலவும் பிரச்சினைகளை பயன்படுத்தி பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜேவி பியும் அரச சேவையாளர்களை பிழையான வழியில் நடத்த முற்படுவதாக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த எதிர்கட்சிகள் அரச சேவையாளர்களை பிழையான வழியில் நடத்துவதற்கென ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களை கொண்டு அலுவலகமொன்றையும் நடத்தி வருகிறதென்றும் தெரிவித்தார்.

அரசாங்க உயர் அதிகாரிகளை அழைத்து கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் மாநாடொன்றை நடத்திய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

குறுகிய அரசியல் இலாபம் கருதி நடத்தப்படும் இந்த சதி முயற்சி தேச துரோகமானது அரசின் கொள்கைகளை அமுல்ப்படுத்தும் பொறுப்பு அரசாங்க உத்தியோகத்தர்களையே சார்ந்ததாகும். தேசிய அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியில் 40வீதமானவை வீணடிக்கப்படுகின்றன.

இது அரசசேவையாளர்களின் கவலையீனத்தினாலேயே நடைபெறுகின்றதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதேசமயம், அரசாங்கம் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பவத்தை ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்றும், இல்லையேல்வேலைநிறுத்தப்போரட்டத்தினை நடத்த வேண்டி வருமெனவும்ஜே,வி. பி. ஏற்கனவேஅரசாங்கத்தினை எச்சரித்திருந்தமையின் பின்னணியிலேயே அரசாங்க உயர்அதிகாரிகளை அழைத்து மேற்படி அறிவுறுத்தலை ஜனாதிபதி விடுத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (வி-உ)

# மாசியப்பிட்டி பாலம் விரைவில் திருத்தப்படும்

## எந்திரி. ஸ்ரீநிவாசன் தகவல்

(யாழ்ப்பாணம்)

மாசியப்பிட்டி பாலத்தை திருத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவடைந்துள்ளதாகவும்,இன்னும் சில தினங்களில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி ஜே ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

கடந்த 12ந் திகதி வலம்புரியில் வெளியான ''மாசியப்பிட்டி பாலத்தால் பயணிகள் அச்சம்'' என்ற செய்திக்கு விளக்கமளித்து எழுதிய கடிதத்திலேயேபிரதமபொறியியலாளர் மேற்கண்ட செய்தியைத் தெரிவித்துள்ளார். (ந)

குறிப்பு:-

மாசியப்பிட்டி பாலம் தொடர்பான செய்திக்குரிய விளக்கத்தைத் தந்து அதன் திருத்த வேலைகள் ஆரம்பமாவது பற்றிய தகவலை உடனடியாக வெளியிட்ட பிரதம பொறியியலாளர் எந்திரி ஜே ஸ்ரீநிவாசன் போன்று ஏனைய திணைக்கள அதிகாரிகளும் செயலாற்றினால் நிச்சயம் நம் மண்ணில் இருக்கும் குறைகளைக் களைய முடியும் என்பதுடன் பிரதம பொறியியலாளரின் முன்மாதிரியையும் வலம்புரி பாராட்டுகிறது. [ஆ-ர்]

# வலைப்பந்தாட்டத்தில் கண்ணகி வி. க. வெற்றி

(இணுவில்)

வலி. தெற்கு பிரதேச செயலக மட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில், கண்ணகி விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்தாடிய அறிஞர் ஐயன்னா விளையாட்டு கழகத்தைத் தோற்கடித்துப் பெரு வெற்றி ஈட்டியது

இப்போட்டித் தொடரின் சிறந்த வீராங்கனையாக சு. சைலஜா தெரிவு செய்யப்பட்டார்.

ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஸ்ரீமுருகன் வி. க. அதனை எதிர்த்தாடிய உடுவில் ஐக்கிய வி. கழகத்தை 3:0 என்ற நேர் செற்றில் தோற்கடித்து வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தின் சிறந்த வீரராக இ. காண்டீபன் தெரிவு செய்யப்பட்டார். (உ-49)

# சமுர்த்தி செயலணி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள காரைநகர் வட மேற்கு கிராம சேவையாளர்பிரிவில்சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் வட மேற்கு கிராம சேவகர் பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. பாரதி தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சமுர்த்தி வலயம் ஒன்றின் முகாமையாளர் செல்விந. மேரி விஜயநந்தினி, கிராமசேவையாளர் தி. சிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டு அலுவலக வேலைகளினைவைபவரீதியாக ஆரம்பித்துவைத்தனர். (உ-75)

# மாயமாய் மறைந்த சைக்கிள்

(சங்கானை)

சித்தன்கேணி பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 ஆயிரம்ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி மாயமாய் மறைந்துள்ளது.

மேற்படி பகுதி தேநீர் சாலைஒன்றின் உரிமையாளரின் துவிச்சக்கரவண்டியே களவாடப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது. (உ-124)

# சுதந்திரபுரம் பாடசாலையில் போசாக்கின்மையால் மாணவர் வரவு பாதிப்பு!

[வவுனியா]

முல்லைத்தீவு கல்விவலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் ஒன்றான சுதந்திரபுரம் உயர்தரப் பாடசாலையில் போசாக்கின்மை, வறுமை போன்ற காரணத்தினால் 40 வீதமான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லையென பாடசாலையின் அதிபர் கல்வி அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் 50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரே கடமையாற்றுகின்றாரெனவும் அத்துடன் பல பாடங்களுக்கு துறை சார்ந்த ஆசிரியர்கள் இல்லையெனவும் தளபாடங்கள் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கையெடுக்குமாறு கல்வித்துறை அதிகாரிகளை கோரியுள்ளார். (வி)

# வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கான வீடமைப்பு திட்டம்

(சுண்டுக்குளி)

நல்லூர் தொகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு கோண்டாவில் கிழக்கு, செபஸ்ரியார் வீதி இணுவில் கிழக்குகாரைக்கால் பகுதி கோண்டாவில் மேற்கு குட்செற் வீதி திருநெல்வேலி பாற்பண்ணை வீதி கொக்குவில் மேற்கு பூனாறிமரத்தடி, தேங்காய் மூலை ஆகிய இடங்களில் விசேட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக இப்பிரதேசங்களில் மொத்தம் 50 வீடுகள் அமைத்து கொடுப்பதற்கு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

இவ் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் விரைவில் 25 ஆயிரம் ரூபாவும் வட பகுதி புனர் வாழ்வு புனரமைப்பு மற்றும் வடகிழக்கு தமிழர் விவகார அமைச்சினால் 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட உள்ளது.

அதேசமயம், அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்தவட்டியில் வீடமைப்பு அதிகார சபையினால்20ஆயிரம்ரூபாய் கடனுதவி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சொந்தக்காணி உள்ளவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் வீடமைத்து கொடுக்கப்பட உள்ளதுடன், வீட்டுக் கூரைகள் சேதம் அடைந்தவர்களுக்கு வழங்குவதற்காக 32 ஆயிரம் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (உ-110)

# நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட செல்வராஜா மணிவண்ணன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் கணனி மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரம் ஆகிய சான்றுப் பொருட்களுடன் ஊரெழு இராணுவ முகாமைச்சேர்ந்த கப்புகம என்பவரை வரும் 27 ஆம் திகதி மன்றுக்கு வருமாறு யாழ்; நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-12)

# மலேசிய பல்கலையில் இலங்கையருக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கை மாணவர்கள் மலேசிய பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படுமென இலங்கைக்கான மலேசியத் தூதுவர் இஸ்கத்தர் சாருதீன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தபால் தந்தி பிரதி அமைச்சர் நஜீப்பை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய போதே தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

க. பொ. த. உயர்தரத்தில் சிறப்புச் சித்தியெய்தும் மாணவர்கள் கணணி, தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு போன்ற துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு வசதியளிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். [ந]

# கோபுரம் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திற்கு பண்ணையில் புதிய தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் கோபுரம் 500 அடி உயரத்தில் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-104)

# ஒன்றுகூடலில் பங்குகொள்ள சாரணர்கிளை சங்கத்தினர் பலேகல்ல பயணம்

(மந்திகை)

கண்டி பலேகல்லவில் இம் மாதம் நடைபெறவுள்ள திரிசாரணர்களுக்கான ஒன்றுகூடலில் பருத்தித்துறை மாவட்ட சாரணர்கிளை சங்கத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறும் இவ் ஒன்றுகூடலுக்கு பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் கோ. செல்வவிநாயகம் தலைமையில் 15 மாணவர்கள் செல்ல உள்ளனர்.

இவ் ஒன்றுகூடலில் வெளிநாட்டு சாரணர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தேசிய சாரணர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# கைத்தொழில் அபிவிருத்திஅதிகார சபை 500 பேருக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால், இந்த ஆண்டுக்கான பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இந்த வகையில், சுய தொழில் முயற்சியினை மேற்கொள்ளும் பொருட்டு விண்ணப்பித்த 500 பேருக்கு கடன் வழங்கியிருப்பதாகவும்,

அவர்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களையும், கைத்தொழில் பயிற்சியினையும் பிரதேச செயலக ரீதியாக முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# தேவை பெரிய யானை

[கொழும்பு]

தலதா மாளிகையில், புத்த பெருமானை வீதிவழியாகக் கொண்டு செல்வதற்காக பெரிய யானை ஒன்றை கோவில் நிர்வாகம் தேடி வருகிறது.

12 வருடங்களுக்கு முன்னர் இறந்த ராஜா என்றயானைக்குப் பதிலாகவே புதிய யானை ஒன்றை நிர்வாகத்தினர் தேடி வருகின்றனர். [உ-7]

# யாழ். வாசியின் வழக்கு வவுனியாமேல் நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்ததாக கூறி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்துரை விஜயரூபன் என்பவரின் வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, காங்கேசன்துறை பயங்கரவாத குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் யாழ் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து பிரஸ்தாபநபரை 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, யாழ் மாவட்டத்தில் மேல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மேல் நீதிமன்றம் கொண்டு செல்லப்படும் யாழ் மாவட்டத்தவரின் வழக்குகளை இங்கேயே தாக்கல் செய்யப்பட வேண்டும் என யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி சட்டமா அதிபருக்கு கடிதமூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

# மூளாய் பாடசாலைக்கு மின்சார வசதி

[ஈச்சமோட்டை]

மூளாய் சைவப்பிரகாசவித்தியாசாலைக்கு, பாடசாலை அதிபரின் முயற்சியின் பேரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு மின்சாரம் வழங்கப்பட்டதன் மூலம் ஆய்வு கூட மற்றும் தொழில் நுட்ப வசதிகளை மேற்படி மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் ஏது நிலை ஏற்பட்டுள்ளது. (உ-59)

## இன்று ஒரு தகவல்

### ஒழுக்கம் ஒன்றுதான் உயர்வு

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி'' ஒழுக்கத்துடன் இருப்பதால் எவரும் மேன்மையையே அடைவார்கள். உயிரினும் மேலானதாகக் கருதப்படும் இந்த ஒழுக்கத்தினை தவறுவதால் பெரும் பழியே ஏற்படும் என்கிறது குறள்.

ஒழுக்கம் என்பது வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தருகிறது. ஆத்மாவின் பலத்தை அதிகரித்து நிற்கிறது. அற்ப ஆசைகளுக்காக இந்த ஆத்மாவின் விலையை விற்பனை செய்வதும், உன்னதமான உலக வாழ்க்கையை வெறும் உயிரற்ற ஜடமாய் வழிநடத்திச் செல்வதும் வல்லமை ஆகாது சலசலத்து ஓடும் நதி ஒழுக்கத்தைத் தவறி கரைகளினை உடைத்துக் கொண்டால் கடலினைஅடைவதெப்படி? இந்த உலகிலே எதுவும் ஒழுக்கம் என்ற வட்டத்துள் வலம் வரும் போது தான் வளமானதாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தையே பாருங்கள்! சூரியனின் ஈர்ப்பென்ற இழுவைக்குள் கோள்கள் 'ஒழுங்காக' இயங்காவிட்டால் இந்த உலகம் .எப்பொழுதோ தொலைந்து போயிருக்கும். அவற்றிற்கு வரையறுத்து வகுக்கப்பட்ட வட்டப் பாதைக்குள் வலம் வராது விட்டிருந்தால் இந்த சூரிய குடும்பம் எப்போதோ சூன்யமாகிப் போயிருக்கும். வயர்களினுள் ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கும் மின்சாரம் ஒழுக்கம் தவறி அயலினில் பாய்ந்தால் அபாயம் தான் எஞ்சும்.

ஆகவே, ஒழுக்கத்தினை இங்கு வழக்கமாக்கிக் கொண்டு ஒழுகுவோமேயானால் உலகம் உன்னதமடையும். உணர்வுகள் கண்ணியமடையும். கல்வி என்பது ஒழுக்கத்தைக் காட்டும் பாதையாக இருக்க வேண்டும். கல்வியின் இலக்கு ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

உயர உயர நீராவி முகிலாக மாறுவது போலக் கல்வியில் உயரும் போதும் வயதினால் வளரும் போதும் ஒழுக்கம் என்பது இன்னும் இறுக்கமாக வர வேண்டும். இதனைத் தான் ஒருவர் இராமகிருஷ்ண பரமகம்சரிடம் கேட்டார் ''சுவாமி கல்வி கேள்விகளில் உயர்ந்து விளங்கும் சிலர் ஒழுக்கம் தவறி நடப்பது ஏன்'' என்று அதற்கு இராமகிருஷ்ணர் சொன்ன பதில் ''பருந்துகள் மிக உயரமான இடத்தில் சுத்தமான காற்று மண்டலத்தில் தான் பறக்கின்றன. ஆனால் அவற்றின் பார்வை மட்டும் கீழே இறந்த ஊண், எலும்புகள மீதும், அவற்றைக் கொல்வதெப்படி? என்றும் தான் இருக்கிறது. அவற்றால் ஏனோ அதே காற்று மண்டலத்தில் பறக்கும் சிட்டுக்குருவிகள்போல இருக்க முடிவதில்லை. அதேபோல் இங்கும் நல்ல இடத்தில் பிறந்து நல்லவற்றை அறிந்தும் கூட மனிதர்களாக வாழாமல் மிருகங்களாகிப்போவது தான் வினோதமாக இருக்கிறது என்றார்.

தொகுப்பு
ரீ. ரீ. மயூரன்

# நிறை குறைந்த பிள்ளைகள் பிறப்பு
# மல்லாவி ஆஸ்பத்திரியில் அதிகரிப்பு

(வவுனியா)

மல்லாவி மருத்துவ மனையில் கடந்த மாதம் 18 குழந்தைகள் நிறை குறைந்து பிறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொருளாதாரத் தடையினால் அங்குள்ள தாய்மார் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு வருவதனால் நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பது அதிகமாகி வருகின்றது.

கடந்த மாதம் நூற்றி 22 பிறப்புக்கள் இடம்பெற்றதுடன் 17 இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன மற்றும் பாம்புக் கடிக்கு இலக்கான 17 பேரும், காசநோயால் பாதிக்கப்பட்டு 10 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். மல்லாவி மருத்துவ மனையின் வெளி நோயாளர் பிரிவில் 10 ஆயிரத்து தொள்ளாயிரத்து 79 நோயாளர் சிகிச்சை பெறச் சென்றுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 500 பேர் மலேரியாவினாலும் நூற்றி 34 பேர் வயிற்றோட்டத்தாலும் முன்நூற்றி 41 பேர் சொறி, சிரங்கினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(உ-5)

## விளையாட்டு போட்டி

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் இணைந்த விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பி.ப 1.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி பாடசாலைகளின் அதிபர் கு. சண்முகநாதன், திருமதி வி.பசுபதிபிள்ளை ஆகியோர் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதய நாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

(உ-125)

## தரம் 2 தபாலதிபர் போட்டிப் பரீட்சை 15 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

தபால் திணைக்களம், தரம் இரண்டின் தபால் அதிபர்களை தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்டத்தில் 1996 டிசம்பர் மாதம் நடத்திய போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜீ. யோகராஜா, றோஜர் பேர்கன், திருமதி ரி. கிறிஸ்னேஸ்வரி, எஸ். பி. பேட்டன், கே. தவகுலநாதன், ரி. சிவபாலன், பி. எம். இம்மானுவேல், ஏ. கனகசபை, பி. சிவசுப்பிரமணியம், என். புஸ்பராஜா, எஸ். பிரேமன், ரி. ராஜேந்திரம், பி. சுகமணி தேவர், என். லோகநாதன், பி. தயாபரன் ஆகியோரே சித்தி அடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் கொழும்பில் இடம் பெறவுள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், போக்குவரத்து மற்றும் ஏதிவிட பாதுகாப்புப்பிரச்சினைகளை காரணம் காட்டி இங்கு நடத்த ஆவன செய்யுமாறு ஈ. பி. டி. பி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரனை சம்பந்தப்பட்டவர்கள் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-9)

## பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபையினால் புண்ணிய நாச்சியம்மையார் நினைவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கீழ் பிரிவு**

முதலாம் இடம் தேவராஜா விதுர்ஷன் (யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

இரண்டாம் இடம் ரஜிந்திரன் சாரங்கி (யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம் சிவாஜினி தனபாலன் (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

**மத்திய பிரிவு**

முதலாம்இடம் குலேந்திரன் ஜெகதீசன் (யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

இரண்டாம் இடம் ஜெ. வைஷ்ணவி (யாழ். மானிப்பாய் மெ.ஆ. பாடசாலை)

மூன்றாம் இடம் தெ. பவனுஜா (யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

**மேற்பிரிவு**

முதலாம் இடம் ஸ்ரீமகள் ஸ்ரீரங்கநாதன் (யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

இரண்டாம் இடம் குமாரவேல் குருபரன் (யாழ். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

மூன்றாம் இடம் நிஷா தர்மலிங்கம் (யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி)

19.02.2001 இல் நடைபெறவிருக்கும் புண்ணியநாச்சியம்மையார் தின விழாவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

(உ)

# குடிநீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்
## எழுவைதீவு மக்கள் ஏமாற்றத்தின்விளிம்பில்

(ஊர்காவற்றுறை)

எழுவை தீவில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக ஊர்காவற்றுறையில் இருந்து குடிநீர் வழங்குவதற்கு 5 இலட்சம் ரூபா செலவில் படகு பவுஸர் கொள்வனவு செய்யப்பட்டதுடன், எழுவை தீவில் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு மாதங்கள் மூன்றாகியுள்ளன.

யு. என். எச். சி. ஆர். நிறுவன உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அன்று கூட நீர் விநியோகம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-75)

# சுண்டுக்குளி மக்கள் மீள குடியமர முடியாத நிலை
## கள்வர் கைவரிசை காரணம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த கள்வரின் கைவரிசையினால் கதவுகள் அற்ற நிலையில் வீடுகள் பல காட்சியளிக்கின்றன.

போர் காரணமாக மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த போது கள்வர் அப்பகுதியிலுள்ள வீடுகளை தொடர்ந்து சூறையாடி வந்தனர்.

இதில் சுண்டுக்குளி பிளச்சர் லேன் பகுதியிலுள்ள பெரும்பாலான வீடுகள், கதவுகள், ஜன்னல்கள் அற்று வெறிச்சோடிப் போயுள்ளதுடன் பல வீடுளில் கூரைத்தகடுகள் வளைகள் என்பனவும் சூறையாடப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதியில் மக்கள மீளவும் குடியமர முடியாத நிலை தோன்றியுள்ளது.

(உ-59)

## மாவட்ட மட்ட உதைபந்தாட்ட அணி 22 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட அணிக்காக 22 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாக செயலக விளையாட்டுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட மேற்படி வீரர்கள் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை வடக்கு - கிழக்கு மாகாணசபை விளையாட்டுத் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி முகாமுக்கு தவறாது கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(உ2 6-15)

## கூட்டம்

தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(உ)

# மனித முன்னேற்ற நடு நிலையம் வன்னியில் மனிதாபிமான உதவிகள்
## இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் தகவல்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் மனிதமுன்னேற்ற நடு நிலையத்தினரால் பலஉதவித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக அதன் இயக்குநர் அருட்தந்தை சி.ஜி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

120 தொண்டர் ஆசிரியர்களுக்கும் 96 வைத்திய ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகையாக மாதமொன்றுக்கு எழுநூற்றைம்பது ரூபாய் வழங்கப்பட்டுவருகின்றதுடன்,

போர் நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் 13 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டமும், 969 பாலர் பாடசாலைச் சிறார்களுக்கு மதிய உணவுத் திட்டமும் அமுல்ப் படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் பெற்றோரை இழந்து அனாதைகளாகியுள்ள 152 மாணவர்களை பராமரிப்பதோடு திருச்சிலுவைச் சபை அருட்சகோதரிகளின் உதவியுடன் நடமாடும் மருத்துவ சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது என்று குறுப்பிட்டார்.

மேலும் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப்பகுதியில் தங்கியுள்ள 91 குடும்பங்களுக்கு இருப்பிட வசதியும் சுய வேலைவாய்ப்பு கடனுதவித் திட்டமும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(உ-59)

## கரிதாஸ் இயக்குநர் இன்று யாழ் விஜயம்

(ஈச்சமோட்டை)

இலங்கை கரிதாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை ஜே. தேவராஜா இன்றுயாழ்ப்பாணத்திற்குவிஜயம் செய்யவுள்ளார்.

கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் இருந்தது இங்கு வரும் இயக்குநர் யாழ். மனிதமுன்னேற்றநடுநிலையத்தில் தங்கியிருந்து தனது பணிகளை கவனிப்பார்.

விஜயத்தின் போது மனித முன்னேற்ற நடு நிலையத்தினரின் நிவாரணப் பணிகளையும் வேலைத் திட்டங்களையும் நேரில் பார்வையிடுவார்.

[உ-59]

# எல்சல்வடோரில் பாரிய பூமியதிர்ச்சி 237 பேர் உயிரிழப்பு

(சன்சல்வடோர்)

எல்சல்வடோரில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற பாரிய பூமியதிர்ச்சியினால் 237 பேர் உயிரிழந்துள்ளனர். 1700 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இப்பூமியதிர்ச்சி காரணமாக பாடசாலைகள், தேவாலயங்கள், வீடுகள் என்பன பாரிய சேதத்திற்கு உள்ளாகின.

இங்கு கடந்த ஒரு மாதத்திற்குமுன் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின்போது சுமார் 850 பேர் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக் கணக்கானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

# கல்வி அபி. திட்டத்தை பூர்த்திசெய்ய 35 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது

(கொழும்பு)

பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்காக கல்வியமைச்சின் நிதியிலிருந்து இவ்வாண்டு முப்பத்தைந்து கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு உட்பட எட்டு மாகாணங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நீர் மின்சாரம், மலசலகூட வசதி, உட்பட அடிப்படை வசதிகளை அபிவிருத்திசெய்வதற்காகவே இந்நிதி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் விபரங்களும், அங்கு செயற்படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றியும் மார்ச் மாதத்திற்கு முன் தகவல்களை வழங்குமாறு கல்வியமைச்சர் சுசில்பிரேம ஜயந்த அறிவித்துள்ளார். (செ)

# தமிழகத்தை பாழாக்கியவர்களுடன் பா. ம. க. தலைவர் ராமதாஸ் கூட்டு

## துரதிர்ஷ்டவசமானது என்கிறார் வை.கோ.

(புதுடில்லி)

அ.இ அ.தி மு கவில் சேருவதற்கு ராமதாஸ் எடுத்த முடிவு துரதிர்ஷ்டவசமானது என ம தி.மு க பொதுச் செயலாளர் வை கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் வந்தபோது நிருபர்கட்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வை.கோ மேலும் கூறியதாவது ராமதாஸ் இந்த தி.மு.க அணியில் இருந்து விலகக் கூடாதுஎன்று விரும்பினேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கூட ராமதாஸ் தென் மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது கருணாநிதி அரசைப் பாராட்டித் தான் பேசியிருந்தார்.

இதனால் அவர் அவ் அணியில் நீடிப்பார் என்று நினைத்தேன். எவ்வாறெனினும் 91 முதல் 96 வரை தமிழகத்தை பாழாக்கி அரச சஜானாவை கொள்ளையடித்து, இந்தியாவில் எங்கும் நடக்காத அளவு ஊழல் செய்து வெறியாட்டம் நடத்தியவர்களுடன் ராமதாஸ் கூட்டுச் சேர்ந்திருப்பதுமிகவும் துரதிர்ஷ்டவசமானது என வை.கோ.கூறி உள்ளார். (உ-9)

# தொழில்நுட்பத்தில் அமெரிக்கா பலவீனம்

(நியூயோர்க்)

அமெரிக்கா மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா பலவீனமடைந்துள்ளதென தேசிய பாதுகாப்பு ஏஜன்ஸியின் இயக்குநர் மைச்ஹேடன் டெலிவிசன் பெட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் பின்லேடன் குழுவால் தாக்கப்பட்டதை முன்கூட்டியே அமெரிக்காவால் அறிந்து கொள்ள முடியாமல் போனதற்கு இதுவே காரணம் என்று அவர் அப்பேட்டியின்போது சுட்டிக்காட்டி உள்ளார். (உ-9)

## உலக தரிசனம்

# அல்ஜீரிய ஆயுதக்குழு வெறியாட்டம் 26 அப்பாவி மக்கள் சுட்டுக்கொலை

[அல்ஜீயர்ஸ்]

அல்ஜீரிய தலைநகர் அல்ஜீயர்ஸ்ஸில் ஆயுதக் குழுவொன்று வயது பேதமின்றி நடத்திய வெளியாட்டத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள கிராமம் ஒன்றிற்குள் புகுந்த மேற்படி கொலை வெறிக் குழுவினர் வீடு வீடாகச் சென்று பெண்கள், சிறுவர்கள், முதியவர் என்றபாகுபாடின்றி சுட்டும் எரியூட்டியும் பொதுமக்களை கொலை செய்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 11 பேர் சிறுவர்களாவர். ஆறு மாத குழந்தை ஒன்றும் இதில் அடங்கும்.

இதேசமயம், மேற்படி ஆயுதக்குழுவினால் இவ் வருடத்தில் மட்டும் 280 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## செய்திப்பரல்

★ ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உக்ரைன் தலைநகர் கீவ்வில், ஜனாதிபதி லியோனிட்குச்மாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

★ மேற்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புக்கள் 20 வயதான பலஸ்தீன இளைஞர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

★ உதவி அட்டோர்னி ஜெனரலாககறுப்பரான லெரிதோம்ஸனை நியமிக்கபுஷ் திட்டமிட்டுள்ளார்.

★ எதிர்க்கட்சியுடன் நடைபெறும் ஜனநாயகப் பேச்சுக்கள் முன்னேற்றம் அடைந்து வருவதாக பர்மிய இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது.

★ கியூபா தலைநகர் ஹவானாவிலுள்ள அமெரிக்க செய்திஸ்தாபனம் (ஏ.பி) மின்சாரக் கோளாறு காரணமாக தீப்பற்றி முற்றாக எரிந்துவிட்டது.

# சோனியாவை சந்திக்க மூப்பனார் டில்லி விரைவு

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தியின் அழைப்பை ஏற்று த.மா.கா. தலைவர் மூப்பனார் கடந்த வெள்ளியன்று டில்லி விரைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அ இ.அ.தி.மு.க கூட்டணியில் பா.ம.க இணைந்துள்ளதை அடுத்து பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இது த மா.கா வையும் பாதித்துள்ளது

இந் நிலையில் த.மா.கா: தலைவர் மூப்பனார் அவசரமாக டில்லி விரைந்துள்ளார்.

இச் சந்திப்பின் பின் அ.இ.அ தி முக. கூட்டணியில் த. மா. கா நீடிக்குமா அல்லது தமிழகத்தில் மூன்றாவது அணி அமைக்க முயற்சிக்குமா என்பதற்கும் விடை கிடைக்கும் எனஅரசியல் அவதானிகள கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

# பிணி தீர்க்கும் பணி

[புதுடில்லி]

இருதய மற்றும் சிறு நீரக அறுவைச் சிகிச்சைக்காக தமிழ் நாட்டைச் சேர்ந்த 9 நோயாளிகளுக்கு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைஅமைச்சர்டி.ஆர்.பாலுவின் பரிந்துரையின் பேரில், பிரதமர் நிவாரண நிதியில் இருந்து 2 இலட்சத்து அறுபதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (உ-7)

## மெய்க்காப்பாளர் சுட்டுக் கொலை

(ஜெருசலேம்)

ஜஸிர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரை இஸ்ரேலியஇராணுவத்தினர் படுகொலை செய்துள்ளனர்.

காரில் பயணம் மேற்கொண்ட வேளை, இஸ்ரேலிய இராணுவத்தினர் பீரங்கியால் சுட்டுக் கொன்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

இவருடைய கொலை தொடர்பாக இஸ்ரேலிய இராணுவம் விடுத்த அறிக்கையில, சுட்டுக் கொல்லப்பட்டவர் ஓர் ஒற்றர் எனவும், போதைப் பொருள் கடத்தல்காரர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# கைவிட்ட கைப்பையினுள் உருவச்சிலைகள் மீட்பு

[கொழும்பு]

அண்மையில் மாத்தளை நகரில் தனியார் பஸ்வண்டி ஒன்றில் விட்டுச் சென்றகைப்பையினுள் இந்துக்கடவுளின் 13 உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டன

கண்டியில் இருந்து பொலநறுவை நோக்கிச் சென்ற பஸ்வண்டியில் மாத்தளையில் வைத்து ஏறிய நபர் ஒருவர் பொதி ஒன்றைவைத்து விட்டு இறங்கியுள்ளார்.

இதனைகண்ணுற்ற பயணிகள நடத்துனரிடம்விடையத்தை கூறியதை அடுத்து அப்பொதி பரிசீலிக்கப்பட்ட போது அதனுள் மேற்படி உருவச்சிலைகள் காணப்பட்டன

இச்சிலைகளின் பெறுமதி 50 இலட்சம் என மதிப்பிடப்பட்டதுடன் சிலைகள் தங்க மூலாம் பூசப்பட்டவை என தெரியவந்துள்ளது.

இந்த சிலைகள் எங்காவது கோயில்களில் களவாடப்பட்டவையாக இருக்கலாம்என்ற சந்தேகமும் எழுந்துள்ளது (உ-6)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றையதொடர்ச்சி

பெப் மாதம்13 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 146044 ஏ | 146044 பி |
| 151007 ஏ | 154780 ஏ |
| 154780 பி | 154780 சி |
| 165038 ஏ | 167930 ஏ |
| 167930 பி | 167960 ஏ |
| 167994 ஏ | 169891 ஏ |
| 169916 ஏ | 176268 ஏ |
| 176278 ஏ | 176507 ஏ |
| 176507 பி | 176507 சி |
| 177842 ஏ | 177842 பி |
| 177896 ஏ | 177896 பி |
| 177931 ஏ | 177931 பி |
| 177931 சி | 177967 ஏ |
| 177967 பி | 177967 சி |
| 177967 டி | 177967 ஈ |
| 177977 பி | 177983 ஏ |
| 177983 பி | 180377 ஏ |
| 180438 ஏ | 180444 ஏ |
| 180444 பி | 180464 ஏ |
| 180478 ஏ | 180478 பி |
| 180478 சி | 180545 ஏ |
| 180545 பி | 180556 ஏ |
| 180556 பி | 180556 சி |
| 180556 டி | 180582 ஏ |
| 180582 பி | 180582 சி |
| 181057 ஏ | 181057 பி |
| 181078 ஏ | 181078 பி |
| 181096 ஏ | 181096 பி |
| 181096 சி | 181130 ஏ |
| 181147 ஏ | 181157 ஏ |
| 181157 பி | 181165 ஏ |
| 181192 ஏ | 181192 பி |
| 181192 சி | 181192 டி |
| 181192 ஈ | 181347 ஏ |
| 181396 ஏ | 181396 பி |
| 181396 சி | 182236 ஏ |
| 182237 ஏ | 182237 பி |
| 182237 சி | 182265 ஏ |
| 182292 ஏ | 182293 ஏ |
| 182294 ஏ | 182295 ஏ |
| 182299 ஏ | 182300 ஏ |
| 182301 ஏ | 182302 ஏ |
| 182303 ஏ | 182305 ஏ |
| 182305 பி | 182306 ஏ |
| 182306 பி | 182306 டி |
| 182306 ஈ | 182313 ஏ |
| 182340 ஏ | 182364 ஏ |
| 182407 ஏ | 182407 பி |
| 182407 சி | 182455 ஏ |
| 182458 ஏ | 182489 ஏ |
| 182489 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 155133 ஏ | 161538 ஏ |
| 176880 ஏ | 178985 ஏ |

| | |
|---|---|
| 181471 ஏ | 181471 பி |
| 181647 ஏ | 181647 பி |
| 181647 சி | 181747 டி |
| 181648 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 181929 ஏ | 178816 ஏ |
| 179359 ஏ | 181473 ஏ |
| 181534 ஏ | 182850 ஏ |
| 182850 பி | 182850 சி |
| 183056 ஏ | |

பெப். மாதம் 14ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 169056 ஏ | 169056 பி |
| 174785 ஏ | 174785 பி |
| 178670 ஏ | 178670 பி |
| 178670 சி | 178897 ஏ |
| 179089 ஏ | 179166 ஏ |
| 179257 ஏ | 179336 ஏ |
| 179448 ஏ | 181440 ஏ |
| 181440 பி | 181464 ஏ |
| 181513 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 118430 ஏ | 168447 ஏ |
| 173505 ஏ | 173505 பி |
| 175277 ஏ | 175277 பி |
| 178023 ஏ | 178023 பி |
| 178024 ஏ | 178024 பி |
| 178042 ஏ | 178051 ஏ |
| 178246 ஏ | 178246 பி |
| 178246 சி | 178246 டி |
| 178270 ஏ | 178270 பி |
| 178270 சி | 178270 டி |
| 178270 ஈ | 178461 ஏ |
| 178461 பி | 1178498 ஏ |
| 178498 பி | 179849 ஏ |
| 179873 ஏ | 79873 பி |
| 179873 சி | 179873 டி |
| 179873 ஈ | 179907 ஏ |
| 179981 ஏ | 179981 பி |
| 179992 ஏ | 180003 ஏ |
| 180003 பி | 180003 சி |
| 180038 ஏ | 180045 ஏ |
| 180045 பி | 180045 சி |
| 180128 ஏ | 180128 பி |
| 180128 சி | 180143 ஏ |
| 180163 ஏ | 180164 ஏ |
| 180172 ஏ | 180186 ஏ |
| 180231 ஏ | 180231 பி |
| 180231 சி | 180253 ஏ |
| 180253 பி | 180253 சி |
| 180253 டி | 180257 ஏ |
| 180257 பி | 180267 ஏ |
| 180267 பி | 180272 ஏ |
| 180276 ஏ | 180276 பி |
| 180276 சி | 180278 ஏ |
| 180278 பி | 180278 சி |

(தொடரும்)

இன்னாசெய் தாரை
ஒறுத்தல் அவர்நாண
ன்னயம் செய்துவிடல்
- குறள்

## வலம்புரி

### பாகிஸ்தானின் பழி தீர்ப்பு

விடுதலைப் புலிகளுக் கெதிரான போரை முன் னெடுத்துச் செல்வதில் இலங்கைக்கு சில நாடுகள் உதவி வழங்கி வருகின்றன. இவ்வாறு வழங்கப் படும் உதவிகளில் ஆயுத உதவி வழங்கும் நாடுகள் இவர்களுக்கும், அவர் களுக்கும் என்ற நிலையில் தமது வியாபார லாபத்தைக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றது.

விடுதலைப் புலிகளுக் கெதிராக வழங்கப்படும் உதவி தமிழர்களுக்கு எதிராக வழங்கப்படும் உதவி என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை, இதனாலோ என்னவோ சில நாடுகள் தமது உதவிகளை மறைமுகமாக வழங்கி விட்டு நல்ல பிள்ளையாக இருந்து விடுகின்றன.

ஆனால் பாகிஸ்தான் மட்டும், புலிகளுக்கு எதிரான போருக்கு வெளிப் படையாக நிதி உதவி- ஆயுத உதவி- இராணுவ ஆலோசனை இராணுவப பயிற்சி என்று எந்தெந்த வழிகளிலெல்லாம இலங் கைக்கு உதவி செய்து புலிகளை ஒழித்துக்கட்ட முடியுமோ அந்தந்த வழி களிலெல்லாம் உதவி செய்து வருகிறது. அண் மையில் புலிகளுக்கு எதிரான போருக்கென 20 மில்லியன் டொலரை பாகிஸ்தான் இலங்கைக் குக் கடனாக வழங்கியுள்ளது. பாகிஸ்தானின் இக்கடனுதவி வடபுலத் திலிருந்து முஸ்லிம் மக் களை வெளியேற்றியதற் குப் பழிதீர்க்கும் ஒரு நடவடிக்கையோ எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக பாகிஸ்தான் மேற்கொண்டுவரும் நட வடிக்கைகள் பழிவாங்கும் ஒருசெயற்பாடாக இருந் தாலும், என்றோ ஒரு நாள் வடபுலத்தில் தமி ழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இணைந்து வாழவேண்டுமாயின் அதற்கு அரசும்-புலிகளும் சமாதானப் பேச்சுவார்த் தையில் ஈடுபடுவது அவ சியமாகும்

இச் சமாதானப் பேச்சு வார்த்தையை வலியுறுத் துவதன் மூலமே பாகிஸ் தான் இடம்பெயர்ந் துள்ள வடபுலத்து முஸ் லிம் மக்களுக்கு உதவ முடியும்.

அதை விடுத்து புலி களுக்கு எதிராக - தமிழர் களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு உதவி வழங்கி வடபுலத்து முஸ்லிம் களுக்கு உதவலாம் எனக் கருதின் அது சேர்ந்து வாழ்வதற்குப் பதிலாக நிரந்தரமாகப் பிரிந்து வாழ்வதற்கே வழிவகுக் கும்.

# புதிய நூற்றாண்டில் புதுமைகள் படைக்க நம்மைத் தயார் படுத்திக் கொள்வோம்

கடந்த நூற்றாண்டு நமது வாழ்க்கையில் சௌ கரியங்கள், அசௌகரியங் கள் என்ற இரண்டும் ஒருங்கே கலந்திருந்ததொரு காலப்பகுதியாகவே எங்களி டமிருந்து விடை பெற்றி ருக்கின்றது. அந்த நூற் றாண்டில் நம் அசௌகரி யங்களையே நிறைய அனு பவித்திருக்கிறோம். நமது வரலாற்றில் கசப்பான பல அனுபவங்களை ஏற்படுத்தி யுள்ளதுடன் அதுவொரு கறைபடிந்த காலப்பகுதி யாகவும் ''நோக்குநர்'' களால் கருதப்படுகிறது. இப் போது புதிய நூற்றாண் டொன்று புலர்ந்திருக்கிறது. இப் புதிய மில்லேனியத்தில் எமது பழைய வாழ்க்கை யைப் புனருத்தாரணம் செய்து வெற்றிகளையீட்டு வதற்கு திடசங்கற்பம் கொள் வோம். வாழ்க்கையின் வெற் றிகளை இந் நூற்றாண்டே தீர்மானிக்கும்படி நம்மை தயார்ப்படுத்துவோம்.

### கரடுமுரடான பாதை

20 ஆம் நூற்றாண்டு நிறைவடைந்து 21 ஆம் நூற்றாண்டு ஆரம்பமா யிற்று. இதற்கிடையில் நமது வாழ்வில் எத்தனை எத்தனையோ எண்ணிலா மாற்றங்கள் திகழ்ந்துள்ளன நமது கடந்தகால வாழ்க்கை யொரு கரடுமுரடான பாதைப் பயணத்தை ஒத் தாற் போல் அமைந்துள் ளது. யுத்த அனர்த்தங்கள், மனிதப்பரிதவிப்புகள், படு கொலைகள், பூமியதிர்ச்சி கள், கொடியநோய்கள், இயற்கையழிவுகள், கண் ணீர்கள், கவலைகள் ஆகி யவை நிறைந்த ஒரு பாரிய வரலாறு இதற்குள் அடங்கி ற்று. அதற்குள்ளும் தவறி இப்போது நாங்கள் புதிய தொரு வரலாற்றாரம்பத் துக்குள் நுழைந்திருக்கிறோம். நமக்காக இறைவன் வரைந் திருக்கும் புதிய வரலாற்றுப் பாதை இது. இது தன்திசை யில் நம்மை அழைக்கிறது.

### நவீனயுக வளர்ச்சி

அந்த அழைப்பின் பிரகா ரம் புதிய வரலாற்றுப் பக் கம் நமது பார்வையைத் திருப்புவோம். இனி வருங் காலங்கள் நவீனயுகம் படைத் தவையாகவும், கடந்த காலத்தைவிட மிகவும் வேக மான அறிவியல் வளர்ச்சி களைக் கொண்ட காலமாக வும் அமையப்போகிறது. அதுமட்டுமன்றி பெருமெடுப் பிலான ஆய்கள், விசித் திரமான விஞ்ஞான விந்தை கள், வசீகரமான உலக சாதனங்கள், புதிய பல உருவாக்கங்கள், விண்வெளி ஓடங்களில் உலாவர மனிதர் கள் எடுக்கின்ற அப்பாற் பட்ட முயற்சிகள், பேரழி வைத்தரும் ஆயுதங்களின் மட்டுப்படுத்தப்படாத உற் பத்திகள், வல்லரசு நாடு களின் ஆணவப் போக்கு. மனிதர்களின் சர்வாதிகாரக் கடும் போக்குகள் ஆகிய இவையனைத்தும் இந் நூற் றாண்டில் விசாலமான இடத்தைப் பிடிக்கலாம்.

### ஆன்மீக விழுமியங்களின் கதி

இது இவ்வாறிருக்க சமூக வளர்ச்சிகள், கலாச்சார மாற்றங்கள், கவர்ச்சி உல கின் மாயப்போக்குகள் ஆகிய இவையனைத்தும் தனது திசையில் நமது சிந்த னையை ஈர்த்துச் செய்யப் போகின்றன. மாயை உல கும், அந்தரங்கமும் நம்மை நெருக்கப் போகின்றன. வாழ்க்கையின் உண்மை இர கசியங்களை மறைக்கப் போகின்றன. ஆபாசக் கவர்ச்சிப் பேய்கள் அதிக அளவில் தலை தூக்கித் தாண்டவமாடப் போகின் றன. இதற்குள்ளும் தப்பி நாம் நமது வாழ்க் கையின் ஆன்மீக விழுமியங் களை எவ்வாறு காத்துக் கொள்ளப் போகிறோம்; இது எவ்வளவு தூரம் சாத்தி யமாகப் போகிறது என்பது தான் எல்லோர் மனதிலும் எழுகின்ற கேள்வியாகும்.

கண்டுபிடிப்புக்கள், உரு வாக்கங்கள், மனிதத்தின் கோரப்பண்புகள், மாயை கள் என்கின்ற இவ்வாறான பல விடயங்களுக்கு நடுவே நாம் தடுமாறும் மனிதர் களாகப் பரிதவிக்கப் போகி றோம். நமது வாழ்க்கையின் ஆன்மீகப் பண்புகள் சிதைக் கப்பட்டு சமுதாயப் போக்கு கள் விரிசலடையப் போகின் றன. நமது வாழ்க்கையின் இனிய இலட்சிய நோக்கு களை இந்த மாயப் பிடிகள் உசுப்பப் போவது நிச்சயமே. இதை உணர்ந்து இதய சுத்தி யுடன் நமது வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி வீறுநடை போடு வோம். நமது ஆன்மீகப் பண்பு களைத்தற்காத்துக் கொள்ளு வோம். வளமான எதிர் காலத்தைக் கட்டியெழுப்ப முயற்சிப்போம்.

### நல்லதோர் அடித்தளம் அமைப்போம்

பழையன கழிதல் புதியன புகுதல, பழமையென்ற விளக் கெடுத்துப் புதுமையென்ற நெய்யினை விடுதல் ஆகிய அறிவுசால் வாக்குகளுக்கு இணங்க இப்புதிய மிலேனி யத்தில் நமமை வளர்க்க, உருவாக்க, வாழ்க்கையை ஒரு பசுஞ்சோலையாகமாற்ற நல்லதோர் அடித்தளத்தை ஆழத்தில் அமைத்துக் கொள் வது மிகமிக அவசியமே.

இவ்வடித்தளத்தில் நம் புதிய சிந்தனைகளைக் கட்டி யெழுப்புவதற்காக நம்மைத் திடப்படுத்திக் கொள்வோம், நமக்குள் உறங்கும் மனிதத் தைத் தட்டியெழுப்புவோம், நம்மனச்சான்றை பேசவிடு வோம், வாழ்க்கை வாழ்வதற் காகவே என்பதை நமக் குள்ளே புரிந்து கொள்வோம். மன உறக்கத்தைக் கலைத்துச் சிந்தனையின் யன்னல்களைத் திறப்போம், வாழ்க்கையின் சுவாரசியங்களை நமது உயர்ந்த நோக்குக்கு எடுத் துக்கொள்வோம், கற்பனை களை நிஜமாக்க முனை வோம், நமது பார்வையை ஒளியுள்ள இடத்திற்குத் திருப்புவோம், அப்போது ஒளியின் நடுவே சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நல்ல விடயங் கள் நமது பார்வையில் நிச் சயம் தென்படும். இவற்றைக் கருத்தில்கொண்டுபுதிய மில் லேனியமென்னும் நீரோடை யில்எதிர்நீச்சல் போட்டு உலா வருவோம்.

விடிவின் திசையில் நமது பயணத்தைத்தொடர்வோம். இந் நூற்றாண்டில் நமக்கென வோர் புதிய வரலாற்றைப் படைப்போம். நூற்றாண்டே நீ வாழியவே!

**டி. ரி. றொபேட்சன்**
உரும்பிராய்

## மறைந்தார் மாண்பு

# தமிழ்த் தட்டச்சின் தேவையுணர்ந்து உழைத்த ஒரு உத்தமர் இராமலிங்கம் முத்தையா

தமிழ் மொழியில் தட்டச் சுப் பொறியை முதன் முதலில் அமைத்தவர் இ முத்தையா இவர் சுண்டுக்குளியில் (யாழ்ப் பாணம்) 24-02-1889ல்பிறந் தவர்; இவரது தந்தை இராம லிங்கம் ஒரு கல்விமான். அத் துடன் ஆறுமுகநாவலரின் சீடர்களில் ஒருவராகவும் இருந்தார். முத்தையாவிற்கு ஏழு வயதாக இருக்கும் போதே தந்தையார் இறந்து விட்டார். பின் தாயாரின் பராமரிப்பில்தமது கல்வியைக் கற்றார். 1907ல் மலாயா சென்றார்.

### வெள்ளிப் பதக்கம்

அங்கு டானியல் போதகரு டன் தொடர்பு முத்தையா விற்கு கிடைத்தது. அவரின் உதவியுடன் புகையிரத இலா காவில் வேலைக்குச் சேர்ந் தார். சில நாட்களில் அவ் வேலையை விட்டு விலகி, பிர பல வணிக நிறுவனமாக ஐல்ஸ் பரிஅண்ட் கார்லண்ட்' இல் வேலை செய்து வந்தார். அங்கு 1930 வரை பிரதம எழுது வினைஞராக பணிபுரிந் தார். இக்காலப் பகுதியில் கணக்குப் பதிவுப் பொருளா தாரம், சுருக்கெழுத்து, தட் டச்சு ஆகியவற்றைப் பயின் றார். 1913 ல் சர்வதேச ரீதி யில் நடைபெற்ற சுருக்கெழுத் துப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்,

### தமிழ்த் தட்டச்சு

அலுவலகங்களில் ஆங்கிலத் தட்டச்சு இருப்பதைப்போல தமிழிலும் தட்டச்சு ஏன் இருக்கக் கூடாது எனச் சிந் தித்தார். அன்று முதல் தமிழ் தட்டச்சு விசைப் பலகையை அமைக்கும் முயற்சியில் ஈடு பட்டார். தனிமையாக அறை யில் இருந்து 247 எழுத்தின் வடிவத்தை ஒருபுறமும் தட் டச்சின் 46 விசையை மறுபுற மும் வைத்து எழுத்துக்களை எப்படி விசைகளில் அமைப் பது என்பது பற்றிச் சிந்தித் தார். எனினும் எழுத்துக் களை 72 ற்கு மேல்குறைக்க முடியவில்லை ஆங்கிலத்தட் டச்சில் இல்லாத நகராவிசை யையும் இவரே கண்டுபிடித் தார். இவ்விசைகளை ஜேர்ம னியில் உள்ள 'சைடல் அன் நௌமான்' என்ற வியாபார நிறுவனத்திடம் கொடுத்து தமிழ் தட்டச்சு பொறிகளை உருவாக்கிப் பெரும்எண்ணிக் கையில் இறக்குமதி செய்து விற்றார். தாம் அமைத்த விசைப் பலகையில் சிலகுறை கள் இருப்பதையும்கண்டார். அவைகளை நீக்கி 'பிஜே' 'ஐடியல்' ஆகிய Portable தட்டச்சுகளை உருவாக்கி னார். இவைகளைப் பின்பற் றியே 'ஆர்சி', எரிக்கா', 'யுரேனியா', 'உறல்டா' போன்ற தட்டச்சுப் பொறி கள் வெளியாகின.

தமிழ் தட்டச்சை உருவாக் கிய முத்தையா தமது 73 வது வயதில்அதாவது11.02 1959 இல் இவ்வுலகை நீத்தார்.

**க.வ. சிவச்சந்திரதேவன்**
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
கரவெட்டி

### சாயி அருளமுதம்



உணவினால்தாங்கப்படும் வாழ்வு குறுகியது. ஆத்மா வினால் தாங்கப்படும் வாழ்வே சாஸ்வதமானது. நீண்ட ஆயுளைக் கோரா தீர்கள். பதிலாகத் தெய்வீக வாழ்வைக் கோருங்கள். அதிக வருடங்கள் பூமியில் தொடர்ந்து இருப்பதற்குப் பேரவா கொள்ளாதீர்கள். அதிக நற்பண்புகளை இத யத்தில் பெறுவதற்கே அவா வுறுங்கள். புத்தர் உண் மையை அறிந்து, அதை உல கத்திற்கும் தெரியப்படுத் தினார். எல்லாம் துயரமய மானது. யாவும் வெறுமையானது. எல்லாம் சுருக்க மானது. எல்லாம் அழுக்கடைந்தது. ஆகவே, விவேக முள்ளவன் தான் செயற்பாலதாகிய கடமைகளை மேற்கொள்ளும் பொழுது அவற்றைச் சீர் தூக்கிப் பார்த்தும், புத்திக்கூர்மையுடனும், பற்றின்றியும் செய்யவேண்டும். ஏற்றுக்கொண்ட பாத்திரத்தை நடியுங்கள். ஆனால் உண்மையில் நீங்கள் யாரென்பது பற்றிய உணர்வு அதனால் பாதிப்புறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை**

சாரங்கனின்
விஷேட விலைக்கழிவு
இன்று முதல் 07/03/2001
வரை உங்கள் ஓடர்களை
முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்
**சாரங்கன்
நகைமாடம்**
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1478]

### புலிகளைத் தடைசெய்யக் கோரும்

# 10லட்சம் பேரின் கையொப்ப மகஜர்

# நாளை மறுதினம் கையளிக்கப்படும்

தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடை செய்ய வேண்டுமெனக் கோரும்பத்து இலட்சம்பேரின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் நாளை மறுதினம் பிரித்தானிய தூதுவருக்கு சிஹல உறுமயக்கட்சி கையளிக்க உள்ளது.

மகஜரைக் கையளிக்க கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவரின் அலுவலகத்திற்கு கட்சித்தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஊர்வலமாகச் செல்லதீர்மானித்துள்ளனர்.

தமிழீழவிடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் அலுவலகங்களை அமைத்துசெயற்படுவதற்கு அந்நாடுகள் அனுமதி வழங்குவதாலேயே புலிகள் இயக்கம் பலம்பெற்றுவிளங்குகிறது. இதனாலேயே புலிகள் இயக்கம் இலங்கையின்தன் ஆதிக்கத்திற்கும் அதன் இறைமைக்கும் அச்சுறுத்தல் விளைவித்து வருகின்றனர். அமெரிக்கா விடுதலைப்புலிகளைத் தடைசெய்ததை முன்மாதிரியாகக் கொண்டு பிரித்தானிய அரசாங்கமும் புலிகள்இயக்கத்தை தடை செய்யவேண்டுமென அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா
ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1477]

**சோஷலிச...**

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் சங்கம் அரச, தனியார் நிறுவனங்களின் முன்பாக இவ் ஆர்ப்பாட்டத்தினை நடத்தவுள்ளது.

யூலைமாதம் வரை எதுவித சம்பள உயர்வுகளும் வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி தொழிற்சங்க அமைப்புக்களிடம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

**கைதுசெய்யப்பட்**

தய சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதியனகே மேலும் கருத்துத் தெரிவிக்கையில;

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் கொழும்பு நகரின் பாதுகாப்பை தான் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் விழிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது இதனால் கொழும்பு நகரில் குற்றச் செயல்கள் பெருமளவு குறைந்துள்ளது.

எனினும் இராணுவத்தில் இருந்து தப்பிஓடிய 30 ஆயிரம் இராணுவத்தினராலேயே நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகிறது இத்தகையகுற்றச் செயல்களை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார். (வ)

**அரசு..**

### போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் புலிகள் செயல்படுகிறார்கள்

நீண்டகால இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர கடந்த ஒன்றரை வருடமாக நோர்வே அரசுமுயற்சி எடுத்து வருகிறது. விடுதலைப் புலிகளும் இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கில் செயல்பட்டுவருகின்றனர்.

கடந்த இருபது ஆண்டுகளாக இடம்பெற்றுவரும்இன மோதல்களுக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும். இதுவரை இடம் பெற்ற போரில் தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் பேட்டியில் மனந்திறந்து கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர் தொடர்ந்து கூறுகையில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முயற்சியில் பெரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது இம் முன்னேற்றத்தின் பலனை அனுபவிக்கும் காலம் நீண்டதாக இருக்க மாட்டாது அது குறுகிய காலமாக இருக்கும்

### பொருளாதார தடையை நீக்குவதுபற்றி அரசு சந்திக்கிறது

அரசும், புலிகளும் பேச்சுவார்த்தையின் விபரங்களை இதுவரை வெளிப்படுத்தவில்லை ஆனால் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன், யுத்தநிறுத்தம் மற்றும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பொருளாதாரத் தடைகளை நீக்குதல் ஆகிய கோரிக்கைகளை புலிகள் வற்புறுத்தி வருகிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு பொருள்களை அனுப்பிவைப்பது தொடர்பாகவும் அரசு சிந்தித்து வருகிறது.

புலிகள் அமைப்பினர் பகிரங்கமாகத் தெரிவிக்கும் விடயத்திலும், பேச்சு வார்த்தைக்கான பேரம் பேசும் நிலையிலும் இடைவெளியிருக்கிறது. பேச்சுவார்த்தைக்கு முன்பாக யுத்த நிறுத்தம் கண்டிப்பாக வரவேண்டுமென்று நோர்வே தூதுவரிடம் கூறவில்லை என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்:

### புலிகளை தடை செய்தால் பேச்சுவார்த்தை பாதிக்காது

பிரிட்டனில் பயங்கரவாதத்திற்கு எதிரான புதிய சட்டத்தின் கீழ் விரைவில் தடைசெய்யப்படவுள்ள குழுக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பும் சேர்க்கப்பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தை வெகுவாகப் பாதிக்கப்படுமென்று புலிகள் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிரிட்டன் புலிகளை தடைசெய்தாலும் சமாதான பேச்சுவார்த்தையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாதுஎன்றும் அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்தார். (வ)

**அவதூறு**

டித்து ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய பாதயாத்திரையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா போன்று வேடமணிந்த பெண்ணின் வீடே இவ்வாறு தாக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன் தினம் கட்டுநாயக்காப் பகுதியில் இடம்பெற்றது.

'ஜனவல' பாதயாத்திரையின் போது ஜனாதிபதியை அவதூறு செய்யும் வகையில் கோஷம் எழுப்பியதுடன் அவரை அவமரியாதை செய்யும் வகையில் யாத்திரையில் செயற்பட்ட எச் எச். ஏ. கமலாவதியின் வீடே இனந்தெரியாத கும்பலினால் தாக்கப்பட்டு வீட்டுத் தளபாடங்களும் தீக்கிரையாக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற போது வீட்டிலுள்ளவர்கள் தப்பித்துச் சென்றதனால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. (இ)

**செக்---**

குழு கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் சந்தித்து பேச்சு நடத்தும்.

இதே வேளை செக்கோசிலோவாக்கியாவிலிருந்து கொழும்புக்கு தூதுக்குழுவொன்று விஜயம் செய்திருப்பது இதுவே முதல் தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

**வீடு--**

இந்த வகையிலேயே அன்ரன் பாலசிங்கத்தின் காரும் தாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல கார்கள் அன்றைய தினம் தாக்கப்பட்டுள்ளது. இதனை தகவல் ஊடகங்கள் பெரிதுபடுத்தி பாலசிங்கத்தின் உயிருக்கு உலை வைக்கும் நடவடிக்கை இடம்பெற்றுவிட்டதென செய்தி வெளியிட்டுள்ளதாக அவ்வமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. (இ-5)

## திருமலையில் புலிக் கொடி பொலிஸார் அகற்றினர்

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள திரையரங்கிற்கு முன்னால் உள்ள விளம்பரப் பலகைக்கு மேல் புலிக் கொடியொன்று பறக்க விடப்பட்டிருந்தது

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இப் புலிக் கொடியினை அங்கிருந்து அகற்றியுள்ளனர்.

திருமலையில் நேற்று முன் தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தையடுத்து பொலிஸார் புலிக் கொடியை பறக்க விட்டவர் யார் என்பதைக் கண்டறியும் நோக்கில்விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (இ)

## கொக்குவில் இந்துவில் நாளை விஞ்ஞானதினவிழா

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் விஞ்ஞான தின விழாவும், சாரதி சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

செல்வன்.யோ கவிதாஸன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.உலகநாதன் கலந்துகொள்வார். நிகழ்வில் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் வாழ்த்துரையையும் செல்வன் ஸ்ரீஅரவிந்தன் வரவேற்புரையையும் நிகழ்த்துவர்.

சாரதி நூல் அறிமுகவுரையை பொறுப்பாசிரியர் வே.உருத்திரேஸ்வரன் நிகழ்த்த, ஆய்வுரையை ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் அ.சோமஸ்கந்தனும் பதிலுரையை இதழாசிரியர் பூ மயூரன் வழங்குவர் விஞ்ஞான மன்றச் செயலாளர் செல்வன் சி. அச்சுதன் நன்றியுரை வழங்குவார். நிகழ்வில் செல்வன் ப.தனுராஜின் கவிதை, இசைச் சித்திரம், பட்டி மன்றம் என்பனவும் இடம் பெறும். [ந]

## அன்பளிப்பு

(கோப்பாய்)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள தென்னிந்திய திருச்சபையின் கீழ்இயங்கும் பாலர் பாடசாலைக்கு கியுடெக்நிறுவனம் 25ஆயிரம்ரூபா பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்பாகவழங்கியுள்ளது

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், பிரபுதேவா
நடித்த
உள்ளம் கொள்ளை
போகுதே
10-30, மட்டும் (ப. நே)
லிவிங்ஸ்டன், கரன்,
விவேக், வடிவேல்
நடித்த
எங்களுக்கும்
காலம் வரும்
2-30 மட்டும் (ப.நே)
(புதிய வெளியீடுகள்)
(கி 1482)

## மத்தியவங்கி குண்டுவெடிப்பு விசாரணை

# புலிகளின் அச்சுறுத்தலாலேயே தலைமறைவாகி இருந்தேன்!

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1996ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி கொழும்பு மத்திய வங்கி குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது.

இந்த வழக்கில் முக்கிய சாட்சியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஸாப்தீன் சாட்சியமளிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகவே நான் தலைமறைவாக இருந்தேன் எனது சாட்சியத்தையும் இரகசியமான முறையில் அளிக்கவே விரும்புகிறேன் அதற்கு இந்த நீதிமன்றம் அனுமதி அளிக்க வேண்டும் என்று நீதவானிடம் வேண்டு கோள்விடுத்தார்.

நேற்றைய விசாரணையின் போது தம்புல்ல பொலிஸ் அத்தியகட்சரும் சாட்சியம் அளித்திருந்தார்.

இவ் வழக்கில் குற்றவாளிகளாக சந்தேகிக்கப்பட்டுள்ளோர் மீது 712 குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டுள்ளன 472 சாட்சிகள் அழைக்கப்பட்டன.

இவ்வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் குற்றவாளிகளாகவுள்ளனர்.

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. [வ]

**விற்பனையாகின்றது**
1) தமிழ் மூலம் கொம்பியூட்டர்
2) கொம்பியூட்டர் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான -NCCA-PART-I
3) OMOS-SELECTION- புத்தகங்கள்
விற்பனையாகின்றது
**மக்மிலன் புத்தகசாலை**
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1480)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;